# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.19, அரசு பண்ணை இல்லம், பேர்ன்பேட்டை, (Pension Pay Office பின்புறம்),
நந்தனம், சென்னை–600 035. தொலைபேசி எண்.044–2951 5590

**முன்னிலை**

**திரு.பி.தாமரைக்கண்ணன்,இ.கா.ப.(ஓய்வு),**
**மாநில தகவல் ஆணையர்**

*****

**வழக்கு எண்.SA 640/விசாரணை/E/2024**

திருமதி.முகைதீன் தௌலத் -- மேல்முறையீட்டாளர்

*/எதிர்/*

பொதுத் தகவல் அலுவலர்/
தலைமையிடத்து துணை வட்டாட்சியர்,
வட்டாட்சியர் அலுவலகம்,
சோழிங்கநல்லூர், சென்னை-119. .. பொது அதிகார அமைப்பு

******

**இறுதி ஆணை**

இவ்வழக்கின் மீது இவ்வாணையத்தால் 05.01.2026 அன்று விசாரணை மேற்கொள்ளப்பட்டு பிறப்பிக்கப்பட்ட உத்தரவின் அடிப்படையில், சோழிங்கநல்லூர் தலைமையிடத்து துணை வட்டாட்சியர்/பொதுத் தகவல் அலுவலர் திரு.சபரீஸ்வரன் 15.05.2026 அன்று ஆணையத்தில் நேரில் ஆஜராகி, ஆணையத்தின் உத்தரவுப்படி, மேல்முறையீட்டாளருக்கு 23.01.2026 தேதியிட்ட கடிதத்தின் வாயிலாக கூடுதல் விபரம் வேண்டி மேல்முறைட்டாளரது மனுவானது பதிவு செய் இ-சேவை மையத்திற்கு திருப்பப்பட்டுள்ள நிலையில், பதிவு செய்த இ-சேவை மையம் நிரந்தரமாக மூடப்பட்ட காரணத்தினால், மேற்படி சான்றினை பரிசீலனை செய்யவோ ஒப்புதல் அளிக்கவோ இயலவில்லை என்றும், இது குறித்து மாவட்ட ஆசியர் அலுவலகத்தில் விசாரணை செய்ததில் அம்மனுவின் மீது எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ள இயலாது எனவும், மேல்முறையீட்டாளரால் மாவட்ட மின்னணு மேலாளரிடம் (e District Manager) மனு செய்து மனுவை நிராகரித்து புதிய மனு செய்யும்பட்சத்தில் மேல்முறையீட்டாளருக்கு வாரிசு சான்று குறித்து பரிசீலனை செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்ற தகவல், வருவாய் ஆய்வாளரின் அறிக்கையுடன் இணைத்து 27.01.2026 அன்று பதிவஞ்சலில் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக தெரிவித்து, வழங்கப்பட்ட தகவலின் நகல் மற்றும் மேல்முறையீட்டாளருக்கு பதிவஞ்சலில் அனுப்பியதற்கான அஞ்சலக ரசீதின் நகல் ஆகியவற்றை ஆணையத்தின் முன் தாக்கல் செய்தார்.

2. மேல்முறையீட்டாளர் 11.03.2026 தேதியிட்டு இவ்வாணையத்திற்கு அனுப்பியுள்ள கடிதத்தில், மேல்முறையீட்டாளர் தன்னிடம் எந்த விசாரணையும் செய்யவில்லை என்றும்,. அவர் தொலைபேசியில் ஒரு வாரத்தில் வாரிசு சான்றிதழ் வேண்டும் என்றால் 24.08.2023 அன்று அளித்த இ-சேவை மையத்தில் பதிவு செய்த வாரிசு சான்று விண்ணப்பத்தை ரத்து செய்கிறேன் என்று கடிதம் தர சொல்கிறார் என்றும், அப்படி செய்தால் பிறகு புதியதாக வாரிசு சான்று விண்ணப்பம் செய்யும் பட்சத்தில் தனக்கு ஒரே வாரத்தில் வாரிசு கிடைக்க ஏற்பாடு செய்கிறேன் என்று கூறி வருகிறார் என்றும் தெரிவித்துள்ளார். இதனை ஆணையம் பதிவு செய்கிறது.

3. இது குறித்து பொதுத் தகவல் அலுவலரிடம் வினவியபோது, மேல்முறையீட்டாளரது வாரிசு சான்றிதழ் ஏற்கனவே அவர் பதிவு செய்த இ-சேவை மையத்தில் திருப்பி அனுப்பி வைக்கப்பட்டுள்ள நிலையில், அவர் பதிவு செய்த இசேவை மையமானது தற்போது நிரந்தமாக மூடப்பட்டுவிட்டதால், மேல்முறையீட்டாளர் மாவட்ட மின்னணு மேலாளரிடம் (e District Manager) மனு செய்து மனுவை நிராகரித்து புதிய மனு செய்யும்பட்சத்தில் மேல்முறையீட்டாளருக்கு வாரிசு சான்று உடனடியாக வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று எடுத்துரைத்தார். இதனை ஆணையம் பதிவு செய்கிறது.

4. ஆகவே, இவ்வாணை கிடைக்கப் பெற்ற 15 தினங்களுக்குள் வாரிசு சான்றிதழ் கோரி பதிவு செய்த இசேவை மையமானது நிரந்தமாக மூடப்பட்ட நிலையில், எவ்வாறு அப்பதிவினை ரத்து செய்வது என்ற நடைமுறையை மாவட்ட மின்னணு மேலாளரிடமிருந்து பெற்று, அதனை மேல்முறையீட்டாளருக்கு தகவலாக பதிவஞ்சலில் அனுப்பி வைத்திடவும், அவ்வாறு பொதுத் தகவல் அலுவலரிடமிருந்து பெறப்பட்ட தகவலை கொண்டு உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு மேல்முறையீட்டாளருக்கு அறிவுறுத்தியும், இவ்வழக்கினை இத்துடன் முற்றாக்கம் செய்து இவ்வாணையம் உத்தரவிடுகிறது.

**ஆணை நாள்: 01.06.2026**

**ஒம்/-.பி.தாமரைக் கண்ணன்,**
**மாநில தகவல் ஆணையர்**

**(ஆணையத்தின் ஆணைப்படி)**

**உதவிப் பதிவாளர்**

**<u>வழக்குஎண்.SA 640/விசாரணை/E/2024</u>**

பெறுநர்
பொதுத் தகவல் அலுவலர்/
தலைமையிடத்து துணை வட்டாட்சியர்,
வட்டாட்சியர் அலுவலகம்,
சோழிங்கநல்லூர், சென்னை-119.

திரு.முகைதீன் தெளலத்,
பிளாட் எண்.13, கதவு எண்.4/365
சாரி அவென்யூ, அண்ணா சாலை,
பாலவாக்கம், சென்னை-119,

அரசு முத்திரை

Copy to: File

RJ/PS 1.6